**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## 1,215 ரயில் நிலைய மேற்கூரைகளில் சூரிய ஒளி மின் உற்பத்தி



**சென்னை:** நாடு முழுவதும் தற்போது வரை 1,215 ரயில் நிலையங்களில் மேற்கூரைகளில் சூரிய ஒளி மின்தகடுகள் நிறுவி, மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கார்பன் வெளியேற்றத்தை பூஜ்ஜியமாக்கும் வகையில், சூரிய ஒளி மின் உற்பத்தியில் தெற்கு ரயில்வே கவனம் செலுத்துகிறது. தெற்கு ரயில்வேயில் கடந்த ஆண்டில் மொத்தம் 5.07 மெகாவாட் திறன் கொண்ட சூரியஒளி மின் உற்பத்தி ஆலைகள் நிறுவப்பட்டன. இதன்மூலம், கடந்த ஆண்டில் 5.47 மில்லியன் யூனிட்கள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டன. சுமார் ரூ.2.3 கோடி சேமிக்கப்பட்டது. தற்போது, சூரிய ஒளி மின் உற்பத்தி அதிகரித்து வருகிறது. இதுகுறித்து தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: ரயில் நிலையங்களில் மேற்கூரைகள், அலுவலகங்கள், பணிமனைகள், தொழிற்சாலைகளில் சூரிய ஒளி மின்தகடுகள் பொருத்தி, மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

**6 கோட்டங்களில் 6 மெகாவாட்:** தெற்கு ரயில்வேயில் சென்னை, மதுரை, திருச்சி, சேலம் உட்பட 6 கோட்டங்களில் 6 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. சென்னை சென்ட்ரல் உள்ளிட்ட முக்கிய ரயில் நிலையங்களில் மின்சார தேவையை, இதன் வாயிலாக பூர்த்தி செய்கிறோம். நாடு முழுவதும் தற்போதுவரை 1,215 ரயில்

நிலையங்களில் மேற்கூரைகளில் சூரியஒளி மின்தகடுகள் நிறுவப்பட்டுள்ளன. 2014-ம் ஆண்டு வரை, 150 ரயில் நிலையங்களில் மட்டுமே சூரிய ஒளி மின்சார தகடுகள் நிறுவப்பட்டிருந்தன. தற்போது, இந்த எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்துள்ளது. இவ்வாறு தெற்கு ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கேரளாவில் 1000-ஐ கடந்த கரோனா பாதிப்பு: வயதானவர்களுக்கு அரசு எச்சரிக்கை



**திருவனந்தபுரம்**: நாட்டிலேயே அதிக அளவாக கேரளாவில் கடந்த சில தினங்களாக கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கேரளாவில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 346 பேர் கரோனால் பாதிக்கப்பட்டனர். மாநிலம் முழுவதும் 1,324 பேர் கரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கரோனா பரிசோதனை அதிக அளவில் நடத்தப்படுவதால் பாதிப்பு அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

இதனிடையே, கரோனாவால் பாதிக்கப்பட்ட கோழிக்கோட்டைச் சேர்ந்த குமரன் (77) கண்ணூர் மாவட்டத்தைச் சேர்ந்த அப்துல்லா ஆகியோர் சிகிச்சை பலனின்றி இறந்தனர். அவர்கள் இறப்புக்கு வயது முதிர்வு மற்றும் இணைநோய்கள் காரணம் என்றும், வயதானவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று மாநில சுகாதாரத் துறை எச்சரித்துள்ளது.

## சமர் வான் பாதுகாப்பு ஏவுகணை சோதனை வெற்றி




**புதுடெல்லி:** சமர் வான் பாதுகாப்பு ஏவுகணை கருவிகள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக இந்திய விமானப் படை (ஐஏஎப்) அறிவித்துள்ளது. இதுகுறித்து ஐஏஎப் அதிகாரிகள் கூறியதாவது:

சமீபத்தில் சூர்யலங்கா விமானப் படை தளத்தில் நடைபெற்ற அஸ்ட்ராசக்தி-2023 பயிற்சியின் போது இந்திய விமானப் படை உள்நாட்டில் வடிவமைத்து உருவாக்கிய ‘சமர்’ வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பின் சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக வெவ்வேறு சூழ்நிலைகளில் குறிப்பிட்ட இலக்குகளை தாக்கி அழிக்கும் நடவடிக்கையை இந்த ஏவுகணை துல்லியமாக நிறைவேற்றியது. இந்த ஏவுகணை அமைப்பு 2 முதல் 2.5 மாக் வேகத்தில் இயங்கும் ஏவுகணைகளின் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பை வழங்கும். அச்சுறுத்தல் சூழ்நிலைகளைப் பொருத்து சமர் அமைப்பு இரட்டை ஏவுகணைகளை ஏவுவதற்காக இரண்டு ட்ரட் ஏவுதளங்களைக் கொண்டுள்ளது.

சமர் ஏவுகணை அமைப்பின் செயல்திறனை விமானப் படை தளபதி ஏர் சீப் மார்ஷல் வி. ஆர். சவுதாரி மற்றும் விமானப் படையின் துணைத் தலைவர் ஏர் மார்ஷல் ஏ.பி.சிங் ஆகியோர் ஏற்கெனவே நேரில் பார்வையிட்டுள்ளனர். இவ்வாறு விமானப் படை அதிகாரிகள் தெரிவித்தனர். தன்னிறைவு திட்டத்தின்படி பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அதன் அடிப்படையில், போர் விமானங்கள், போக்குவரத்து விமானங்கள், ஹெலிகாப்டர்கள், தரை ஆயுத அமைப்புகளில் பயன்படுத்தப்படும் உதிரிபாகங்கள், உபகரணங்கள் உள்நாட்டில் உருவாக்குவதிலும், அதனை பராமரிப்பதிலும் குறிப்பிடத்தக்க அளவிலான வெற்றி கிடைத்துள்ளது. சமர் வான் பாதுகாப்பு அமைப்பு இந்திய விமானப் படையின் 7 பிஆர்டி-யால் (பேஸ் ரிப்பேர் டிபாட்) உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

EVA STALIN IAS